பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 02 2025 **THURSDAY** 12 40 **PM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புலனாய்வு தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமெரிக்க தேசிய புலனாய்வுப் பிரிவு இயக்குநர் திருமதி.**Tulsi Gabbard-**உடன் பேச்சு நடத்தினார்.

2. வக்ஃப் சட்டதிருத்தம் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கை நாடாளுமன்ற இருஅவைகளிலும் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

3. உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்

5. துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Diva Bhatia –** கிரீஸின் **Sapfo** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி வாஷிங்டனில் அந்நாட்டு தேசிய புலனாய்வு இயக்குநர் திருமதி.**Tulsi Gabbard-**ஐ சந்தித்து பேசியுள்ளார்.

இந்த சந்திப்பிற்கு பின்னர் பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அமெரிக்காவின் புதிய அரசில் தேசியப் புலனாய்வுப் பிரிவு இயக்குநராக பொறுப்பேற்றதை ஒட்டி, திருமதி. **Tulsi Gabbard-**க்கு வாழ்த்து தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவருடன் இந்தியா – அமெரிக்கா இடையிலான நட்புறவு குறித்து விரிவாக ஆலோசித்தாக பிரதமர் கூறியுள்ளார்.

குறிப்பாக, புலனாய்வுத் தகவல்கள் பரிமாற்றம், தீவிரவாத எதிர்ப்பு, இணைய பாதுகாப்பு, புதிதாக உருவாகும் அச்சுறுத்தல் பற்றி விவாதித்ததாகவும், பரஸ்பர நலன் சார்ந்த பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்து கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

வக்ஃப் சட்டதிருத்தம் தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கை மக்களவை மற்றும் மாநிலங்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டன.

மாநிலங்களவையிலும் கூட்டுக் குழுவின் அறிக்கையை தாக்கல் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், அவை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டு பின்னர், வழக்கமான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, கூட்டுக்குழு அறிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆட்சேபங்கள் சேர்க்கப்படாதது, ஜனநாயக விரோதமானது என்று கூறினார்.

எனவே அந்த அறிக்கையை மறுபரிசீலனை செய்யும்படி கூட்டுக்குழுவிற்கே திருப்பி அனுப்புமாறும் திரு. கார்கே வலியுறுத்தினார்.

>>>>>><<<<<

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வானொலி, மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக உள்ளதாக கூறியுள்ளார்.

செய்தி, கலாச்சாரம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை வழங்கி, மக்களை இணைக்கும் சக்திவாய்ந்த ஊடகமாக வானொலி திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இம்மாதம் 23ஆம் தேதி இடம்பெறவுள்ள மன்கிபாத் நிகழ்ச்சிக்கான கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுமாறும் பொதுமக்களை பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் வானொலி முக்கியப் பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

'வானொலியும், பருவநிலை மாற்றமும்' என்ற இந்த ஆண்டு வானொலி தினத்தின் மையக்கருத்தின் அடிப்படையில், பருவநிலை மாற்றத்திற்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு, வருங்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான எதிர்காலத்தை வழங்க பாடுபடுவோம் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அவசர காலங்களிலும், இயற்கை சீற்றங்களின் போதும் மக்களுக்கு தகவல்களை வழங்குவதில் வானொலி முக்கியப் பங்கு வகிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகர பாரதி 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் பிறந்த நாளை ஒட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அவரது உருவப்படத்திற்கு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் சிங் உள்ளிட்டோரும் சரோஜினி நாயுடுவின் படத்திற்கு மரியாதை செலத்தினர்.

**>>>>>><<<<<<**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

சத்திஷ்கர் மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணுதியோ சாய் தலைமையில், அம்மாநில அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கும்பமேளாவில் பங்கேற்பதற்காக இன்று ராய்ப்பூரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

கும்பமேளாவை ஒட்டி நாடுமுழுவதும் கூடுதல் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் தேவைகளுக்கேற்ப ரயில் சேவைகளை அதிகரிப்பது குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ரயில்வே வாரிய தலைவர் திரு. சதிஷ்குமார் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் புதுதில்லியில் நேற்று ஆலோசனை நடத்தினார்.

மகா கும்பமேளாவிற்கு வரும் பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கல்வி நிலையங்களில் பாலியல் அத்துமீறல் தொடர்பாக 238 புகார்கள் வந்துள்ளதாகவும், வருங்காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மேலும் பாலியல் புகார்கள் குறித்து காலதாமதமின்றி நடவடிக்கை எடுப்பதுடன், அதுபற்றி உடனடியாக உயரதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கல்வித்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தகவல் தொழில்நுட்ப கல்விக்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதி முறையாக செலவிடப்படவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆறாம் வகுப்பிலிருந்தே தகவல் தொழில்நுட்ப கல்வி தனிப்பாடமாக இடம்பெறவில்லை என்றும், இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் இதற்காக எத்தனை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் திரு. அண்ணாமலை வினவியுள்ளார்.

**>>>>>><<<<<<**

நாட்டின் மிகவும் உயரமான மலைப்பகுதிகளில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆயிரம் ஹெலிகாப்டர்களை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த புதிய ஹெலிகாப்டர்கள் பகல் மற்றும் இரவு நேரங்களில் ஐயாயிரத்து 500 மீட்டர் உயரம் வரை பறந்து செல்லும் திறனுடையதாக இருக்கும்.

மேலும், உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா இயக்கங்களின் அடிப்படையில் ஹெலிகாப்டர்கள் மற்றும் அவற்றுக்கான உதிரிப் பாகங்கள் கொள்முதல் செய்யப்படும் என்றும் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**>>>>>><<<<<<**

ராஜஸ்தான் மாநிலம், கோட்டா அருகே, தில்லி – மும்பை விரைவுச் சாலையில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

ஆக்ராவிலிருந்து மன்ட்சார் நோக்கி சென்று கொண்டிருந்த பேருந்து, சாலையில் நின்று கொண்டிருந்த டிரக் மீது மோதி நேரிட்ட விபத்தில் இரண்டு பேர் காயமடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சுஷித் சங்கர் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Diva Bhatia –** கிரீஸின் **Sapfo** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை 6-3, 5-7, 10-4 என்ற செட்கணக்கில் சீனாவின் **Jiayu Xu – Aitiyaguli** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

உத்ராகாண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் டேபிள் டென்னிஸ் பிரிவில் தமிழகத்தின் சத்யன் ஞானசேகரன் மற்றும் செலீனா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் சத்யன் ஞானசேகரன், 12-10, 18-20, 11-3, 5-11, 11-9 என்ற செட்கணக்கில் அபிநந்தை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் செலீனா, 7-11, 16-14, 11-7, 11-9, 11-6 என்ற செட்கணக்கில் மகாராஷ்ட்ராவின் **Pritha Priya-** வை வென்றார்.

**>>>>>>END<<<<<<**